## August 1, 2025 - தினமணி செய்தித்தாள் சிறுதுணுக்கள்

1. இந்திய பொருள்கள் மீது ஆகஸ்ட் 1-ஆம் தேதி முதல் 25 சதவீத வரி மற்றும் அபராதம் விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட்டிரம்ப் அறிவித்தார்.
2. வேளாண் விஞ்ஞானி டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதனின் நூற்றாண்டு விழாவில் அவரது பெயரில் உணவு மற்றும் அமைதிக்கான சர்வதேச விருதை பிரதமர் நரேந்திர மோடி வழங்குகிறார். டாக்டர் எம்.எஸ்.சுவாமிநாதனின் நூற்றாண்டு விழாவை பிரதமர் நரேந்திர மோடி தில்லி பூசாவில்ஆகஸ்ட் 7-ஆம் தேதி தொடங்கிவைக்கிறார்.
3. பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க திட்டமிட்டுள்ளதாக கனடா அறிவித்துள்ளது. உலகின் சக்திவாய்ந்த நாடுகளின் கூட்டமைப்பான ஜி7 நாடுகளில், பிரான்ஸ்தான் பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிக்க முதல்முறையாக கூறியது.
4. சமூகத்தில் நீண்ட காலமாக ஒதுக்கப்பட்ட திருநங்கைகள் சமூகத்துக்கு ஆழமான, கட்டமைக்கப்பட்ட மாற்றங்கள் தேவை என்பதை உணர்ந்து, தமிழ்நாடு மாநில 'திருநங்கையர் கொள்கை-2025' தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ளது.
5. தெலங்கானா உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்த டி.வினோத்குமாரை, சென்னை உயர்நீதிமன்றத்துக்கு இடமாற்றம் செய்ய உச்சநீதிமன்ற கொலீஜியம் பரிந்துரை செய்தது. இந்த பரிந்துரையை ஏற்று, அவரை சென்னை உயர்நீதிமன்றத்துக்கு மாற்றி குடியரசுத் தலைவர் உத்தரவிட்டார். அதன்படி நீதிபதி டி.வினோத்குமாதருக்கு தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவாஸ்தவா பதவிப்பிர மாணம் செய்து வைத்தார்.
6. ஆக. 2-ஆம் தேதி 'நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் தொடங்கப்படும். இந்த திட்டதில் உயர் மருத்துவ சேவைகள் வழங்க ரூ.12.78 கோடி செலவில் மருத்துவ முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டது.
7. மியான்மரில் நான்கரை ஆண்டுகளுக்கு முன்னர் ஆட்சியைக்கைப்பற்றிய போது அறிவித்திருந்த அவசரநிலையை திரும்பப் பெறுவதாக அந்த நாட்டு ராணுவம் அறிவித்துள்ளது.அவசரநிலை திரும்பப் பெறப் பட்டதற்குப் பிறகு தேசியகக் கவுன்சில் தலைவர் மற்றும் பிரதமர் பதவிகளை ராணுவ தலைமைத் தளபதி மின் ஆங் லாயிங் கைவிட்டாலும், நாட்டின் அதிபராகவும், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள தேசிய பாதுகாப்பு மற்றும் அமைதி ஆணையத்தின் தலைவராகவும் தொடர்ந்து அவர் அதிகாரத்தை தக்கவைப்பார்.
8. உக்ரைனில் சர்ச்சையை எழுப்பியுள்ள ஊழல் தடுப்பு மசோதாவுக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டங்கள் வெடித்ததைத் தொடர்ந்து, பல திருத்தங்களுடன் அந்த மசோதா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டம் ஊழல் தடுப்பு அமைப்புகளின் சுதந்திரமான செயல்பாட்டை உறுதி செய்யும்.
9. சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் உள்ள ஜிச்சாங் விண்வெளி மையத்தில் இருந்து தனது புதிய தொலையுணர்வு செயற்கைக்கோளை (பிஆர்எஸ்எஸ்-1) பாகிஸ்தான் வெற்றிகரமாக ஏவியது. அந்த செயற்கைக்கோள், காலநிலை மாற்ற அச்சுறுத்தல்களைக் கண்காணிக்க உதவும். சீனாவின் குவைஜோ-1ஏ ராக்கெட் மூலம் ஏவப்பட்ட இந்த செயற் கைக்கோள், பாகிஸ்தானின் விண்வெளி ஆய்வு மையத்தின் தொழில்நுட்ப உதவியுடன் புவி சுற்றுப்பாதையில் செலுத்தப்பட்டது.
10. **செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள்:** -
    i. கனடா பிரதமர் - மார்க் கார்னி.
    ii. ஐக்கிய அரபு அமீரக அதிபர் - முகமது பின் சையது அல் நஹ்யான்
    iii. பிலிப்பின்ஸ் அதிபர் - ஃபெர்டினண்ட் ஆர்.மார்கோஸ் ஜூனியர்.
    iv. தருண் மன்னேபள்ளி - இந்திய பேட்மிண்டன் வீரர்